பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 15 வியாழக்கிழமை 28.05.2020 கதிர் 204

## வெடிவிபத்தில் 2 சிறுவர்கள் படுகாயம்!

வவுனியா, மே 28

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வாழவைத்தகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வெடிவிபத்தில் இரு சிறுவர்கள் காயமடைந்து வவுனியா வைத்திய பக்கம் 04

# இலங்கையில் 'கொரோனா' தாண்டவம்! நேற்று ஒரே நாளில் 150 பேர் அடையாளம்!!

மொத்தப் பாதிப்பு 1,469 ஆக அதிகரிப்பு

கொழும்பு, மே 28

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்று 150 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 1,469 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றிரவு 11.55 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆகக்கூடுதலாக 137 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கையைக் கடந்து நேற்று ஒரே நாளில் 150 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடற்படையினரும், வெளிநாட்டிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்களுமே நேற்று கொரோனாத் தொற்றுடன் அடையாளம் பக்கம் 02

## இனி இது ரகசியம் அல்ல!

அமைச்சர் அமரர் ஆறுமுகம் தொண்டமான் மறைந்த இவ்வேளையில் அவரைப் பற்றியே பலரும் பேசுகின்றமை தவிர்க்க முடியாதது.

அவரைப் பற்றி இரண்டு முக்கிய விடங்கள் கட்டாயம் எழுதப்படவேண்டும். பக்கம் 02

# சஜித் அணிக்கு முடிவுகட்ட ஐ.தே.க. அதிரடி தீர்மானம்!

### கட்சி தாவி வேட்புமனுவில் கைச்சாத்திட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை



கொழும்பு, மே 28

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை கோட்பாடுகளை மீறி இன்னுமொரு அரசியல் கட்சியில் வேட்புமனுக்களில் கைச்சாத்திட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார். பக்கம் 02

## மஹிந்தவுடன் மோடி தொலைபேசியில் பேச்சு

### தொண்டா மறைவுக்கும் அனுதாபம் தெரிவிப்பு

கொழும்பு, மே 28

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுத் தொலைபேசியில் பேசினார்.

இதன்போது நாடாளுமன்றத்தில் மஹிந்த 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தமைக்கு மோடி பக்கம் 02

## தொண்டானுக்கு இன்று நாடாளுமன்றில் அஞ்சலி

கொழும்பு, மே 28

மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பூதவுடல் இன்று நாடாளுமன்றில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

தொண்டமானின் பூதவுடன் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளதாக நாடாளுமன்றச் செயலாளர் பக்கம் 02

## கொரோனாவைக் காரணம் காட்டி அரசைப் பலவீனப்படுத்த முயற்சி!

### எதிரணி மீது விமலின் கட்சி பாய்ச்சல்

கொழும்பு, மே 28

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி, நாட்டைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிர்த்தரப்பினர் ஆதரவு வழங்கவில்லை. அவர்கள் கொரோனாவைக் காரணம் காட்டி அரசைப் பலவீனப்படுத்தி அரசியல் இலாபம் தேடிக் கொள்ளவே முயற்சிக்கின்றார்கள்.

– இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஆ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே பக்கம் 04

## மஹிந்தவைத் தேடிச் சென்று சந்தித்த புதிய இந்தியத் தூதர்



இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அலரிமாளிகையில் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சுகளை நடத்தினார். பக்கம் 02

### மஹிந்தவுடன் இ.தொ.கா. தூதுக்குழு அவசர சந்திப்பு

## நுவரெலியாவில் ஆறுமுகத்தின் இடத்துக்கு களமிறங்குகின்றார் அவரது புதல்வர் ஜீவன்



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மறைவையடுத்து, நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிடவிருந்த நுவரெலியா மாவட்டத்தில் அவருக்குப் பதிலாக களமிறங்குகின்றார் அவரது புதல்வர் ஜீவன் தொண்டமான்.

நேற்று மாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த இ.தொ.கா. தூதுக்குழு பக்கம் 04

## ஜூன் 2 தொடக்கம் சபாநாயகர் வசமாகின்றது நாடாளுமன்றம்!

### அரசியல் நெருக்கடிக்கு முடிவு காண்பதற்கு நீதிமன்றத் தீர்ப்பு முக்கியம் என்கிறார் ரணில்

கொழும்பு, மே 28

மூன்று மாதங்கள் மாத்திரமே ஆயுள்காலம் கொண்ட ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு, அரசமைப்பின் பிரகாரம் ஜூன் மாதம் 2 ஆம் திகதியுடன் காலாவதியாகின்றது. அன்றிலிருந்து பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவை இரண்டிலுமே நேரடியாக நானும் சம்பந்தப்பட்டிருந்தேன். அவற்றை எழுதி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடும் எனக்கு உண்டு. இரண்டுமே சில சமயங்களில் இன்றைய நிலையில் நம்பமுடியாதவையாக இருக்கக் கூடும். இரண்டுக்குமே சரியான சாட்சிகள், சாட்சியங்கள், ஆதாரங்கள் உண்டு. திகதி வாரியாக அவற்றை உறுதிப்படுத் திக் கொண்டு அடுத்து வரும் நாள்களில் அதைப் பகிரங்கப்படுத்தலாம் என்று நினைக்கிறேன்.

விடுதலைப் புலிகளின்பால் பரிவு கொண்டவராக இருந்தவர் ஆறுமுகன் தொண்டமான்.

*"தமிழ்ச் சமூகம் முகம் கொடுத்த பிரச்சினைகளைச் சரியாக அறிந்திருந்த தொண்டமான், அதற்காகத் தனது அர சியல் வாழ்க்கையை அர்ப்பணித்திருந் தார். அக்கால கட்டத்தில் செயற்பட்டுவந்த சக்திவாய்ந்த பயங்கரவாத அமைப்பால் விடுவிக்கப்பட்ட அழுத்தங்களுக்கு மத்தி யிலும் தமிழர்களுக்கான தனிநாடு என்ற கருத்துக்கு ஆதரவளிக்க அவர் உறுதி யாக மறுத்துவிட்டார்..."* – என்று ஆறுமுகம் தொண்டமானின் மறைவை ஒட்டித் தாம் நேற்று வெளியிட்ட அனுதாபச் செய்தி யில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், ஆறுமுகம் தொண்டமா னுக்குப் புலிகள் ஏதும் அழுத்தம் கொடுத்தார்களா, தனிநாட்டுக்கோரிக்கைக்கு ஆதரவளிக்க அவர் மறுத்தாரா என்பவை பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது. அனால் ஒரு விடயத்தில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கு அவரது இறுதிக் காலத்தில் இருந்த ஓர் எண்ணப்போக்குடன் ஆறுமுகம் தொண்டமான் ஒன்றிப் போயிருந்தார் என்பதை நான் அறிவேன். தமிழர் தொடர்பான ஒரு விடயத்தில் பாலா அண்ணனின் சிந்தனையும், ஆறுமுக னின் எண்ணமும் ஒரே நிலைப்பாட்டில் இருந்தமையை நான் நெருங்கி அவதா னிக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

அது – விடுதலைப் புலிகளின் போராட் டம் மூலம் ஈழத் தமிழர்களுக்கு பயனுள்ள – உறுதியான – நின்று, நிலைக்கக் கூடிய – தீர்வு கிட்ட வேண்டுமானால் அதற்கு இந்தியா – புலிகள் இடையே முறுகல் நிலை தவிர்க்கப்பட்டு, ஒரு புரிந்துணர்வு எட்டப்பட வேண்டும் என்ற சிந்தனையே.

பாலா அண்ணன் ஒரு தடவையும், ஆறுமுகம் தொண்டமான் ஒரு தடவை யும் அந்த முயற்சியில் ஈடுபட்டபோது நானும் அவற்றில் சம்பந்தப்பட்டேன். பாலா அண்ணன் இல்லாத காலத்தில் – ஆறுமுகன் தொடர்புபடாமல் – மூன்றா வது தடவையாக – கடைசியாக – ஒரு முயற்சி என பங்களிப்புடன் முன்னெடுக் கப்பட்டது. மூன்று முயற்சிகளுமே வித்தி யாசமான காரணங்களினால் அவமாகிப் போனமை தமிழினம் செய்த துரதிஷ்டமே.

ஆறுமுகம் சம்பந்தப்பட்ட விவரத்தை அடுத்து வரும் நாள்களில் நான் விவரிப் பேன். தொண்டமான் இல்லாவிட்டாலும் அவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அவரது உதவியாளர்கள் உள்ளனர். அவர்களில் சிலர் இன்று தொண்டமானின் இ.தொ. காவில் இல்லை. எனினும் எனது பதிவு களுக்கு அவர்கள் சாட்சியமாவார்கள்.

விடுதலைப் புலிகளையும் புதுடில் லியையும் ஒரே எண்ணவோட்டத்தில் சங்கமிக்க வைக்கும் நன்முயற்சியைத் தொண்டமான் தீவிரமாக முன்னெடுத் தார். எந்த அரசியல் பிரதிபலனும் எதிர் பார்த்து அல்ல. வடக்கு, கிழக்கு தமிழர்க ளின் உயர்வு கருதி மட்டுமே அந்த முயற் சியில் அவர் ஈடுபட்டார்.

ஊடகவியலாளன் என்ற முறையில் எனக்கு இருந்த தொடர்புகளை – நம் பிக்கைத் தன்மையை – இந்த நன்முயற் சிக்கு தொண்டமான் பயன்படுத்த விரும் பினார். புலிகளின் அரசியல் பொறுப்பா ளரின் இசைவுடன் நான் தொண்டாவின் முயற்சிக்கு ஒத்துழைத்து இந்தியா சென்றேன். அது ஒரு விடயம்.

அடுத்தது – யுத்தம் முடிந்த காலகட்டத் தில் யாழ்ப்பாணத்தில் ஒரு நாளிதழுக்கு நிரந்தர ஆப்பு வைக்க எடுக்கப்பட்ட முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு எந்த வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் தொண்டமான் ஆபத்பாந்தவனாக வந்தார். அப்போதைய பாதுகாப்புச் செயலாளரின் விருப்பத்தை மீறி, அவர் தமையனார் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவரை அவர் உறுதியோடு சென்றார். அவரது அந்த எத்தனம் வெற்றி தந்தது. யாழ்ப்பாணத்து நாளிதழின் ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பு உத்தரவா தத்தை நாட்டின் ஜனாதிபதி வழங்குகின் றார் என்ற செய்தியை அடுத்த நாள் பத்தி ரிகைகளில் முதற்பக்கத்தில் தலைப்புச் செய்தியாக – அதுவும் ஜனாதிபதி தாமே நேரடியாகத் தொலைபேசி அழைப்பு எடுத்து அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு வழங்கினார் என்ற விவரத்துடன் – வெளி யிடும் உறுதிப்பாட்டை ஏற்படுத்தித் தந்தார் தொண்டமான்.

ஆறுமுகன் தொண்டமானின் முயற் சியால்தான் தாம் அப்படி ஓர் உறுதி பாட்டைத் தருகின்றார் என்ற தகவலை அந்தச் செய்திக்குள் சேர்த்துக் கொள்ளும் படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பத்திரிகை ஆசிரியரை தொலைபேசியில் கேட்டுக் கொள்ளும் அளவுக்கு ஆறுமுக னின் அழுத்தம் அதில் இருந்தது.

வேறு வழி ஏதுமின்றி அடுத்த ஓரிரு நாள்களில் அடியோடு மூடப்படவிருந்த ஒரு பத்திரிகைக்கு இப்படி உயிர் கொடுக் கக் காலாகவிருந்தவர் ஆறுமுகன் தொண்டமான். இன்று அந்தப் பத்திரி கையில் குதிரை விட்டுக் கொண்டிருக்கும் – அந்தப் பத்திரிகையை வைத்து அரசி யல் வர்த்தகம் நடத்திக் கொண்டிருக்கும் அதன் முதலாளி உட்பட அனைவருக் கும் – தொண்டமானின் இந்த அளப்பரும் பங்களிப்புத் தெரியுமோ என்னவோ!

2009 மேயில் யுத்தம் முடிவுக்கு வந் தது. ஜூன், ஜூலை மாதங்களில் 25 முதல் 30ஆம் திகதிக்கு உட்பட்ட பத்திரிகை களை அவர்கள் எடுத்துப் பார்த்தார்களா னால் – ஒவ்வொரு ஊழியருக்கும் உத் தரவாதமளிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செய்தி வெளியாகியிருக் கும் இதழை வாசிப்பார்களாயின் – அதன் வரிகளுக்கு இடையே தொண்டமானின் பங்களிப்பை அவர்களும் உணரமுடியும்.

இவை எல்லாம் ஈழத் தமிழர் போராட் டம் தொடர்பில் தொண்டமானின் வெளித் தெரியாத பங்களிப்புக் குறித்து நான் எழுதப்போகும் வியாசத்தின் சில முன் னூட்டல்கள். அவ்வளவுதான். அவற்றை அடுத்து வரும் நாள்களில் வசதிக்கு ஏற்ப இப்பத்தியில் பார்ப்போமா வாசகர்களே...!

– மின்னல் –

## சஜித் அணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நேற்று விசேட அறிக்கையூடாக இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இன்னொரு கட்சியில் போட்டியிடு வதென்றால் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் செயற்குழுவின் அனுமதியைப் பெறவேண்டும் எனக் கட்சியின் யாப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் யாப்பில் தெரிவிக்கப்பட் டுள்ள இந்த விடயத்தைப் பின்பற்றாத வர்களுக்கு எதிராக கட்சியின் தலைமை நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடு பட்ட உறுப்பினர்களிடம் கட்சி விளக்கம் கோரியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மஹிந்தவுன் மோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துத் தெரிவித்தார். இலங்கையின் வளர்ச்சிக்காக மஹிந்த ஆற்றிய பணி கள் குறித்தும் அவர் பாராட்டினார்.

மேலும், கொரோனாவை எதிர்த்துப் போராடி வரும் அண்டை நாடான இலங் கைக்கு இந்தியா எப்போதும் தனது ஆத ரவை அளிக்கும் எனவும், தேவையான உதவிகளை வழங்கும் எனவும் மஹிந் தவிடம் மோடி உறுதியளித்தார்.

அத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் திடீர் மறை வுக்கும் மஹிந்தவிடம் மோடி இரங்கல் தெரிவித்தார்.

## தொண்டாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் தம்மிக்க தசநாயக்க அறிவித் துள்ளார்.

முற்பகல் 10.45 மணி முதல் 11.30 மணிவரை அன்னாரின் பூதவுடல் நாடா ளுமன்ற ஒன்றுகூடல் மண்டபத்தில் அஞ் சலிக்காக வைக்கப்படவுள்ளது. அதன் பின்னர் 11.30 மணிக்கு பூதவுடல் நாடாளு மன்ற வளாகத்திலிருந்து எடுத்துச் செல் லப்படும். ஜனாதிபதி, பிரதமர், அமைச் சர்கள், சபாநாயகர் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் அங்கு அஞ்சலி செலுத்துவார்கள் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

## மஹிந்தவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின்போது இலங்கை – இந் தியா இடையிலான இருதரப்பு உறவை மேலும் விஸ்தரிப்பதற்கான ஆணையுட னேயே தான் இலங்கை வந்துள்ளார் என இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸினால் உண்டாகி யுள்ள சவால்கள் மற்றும் கொரோனா வுக்குப் பிந்திய பொருளாதார மீட்சி என் பவை தொடர்பில் இலங்கையுடன் தோளோடுதோள் நிற்பதற்கான இந்தி யாவின் அர்ப்பணிப்பையும் தூதுவர் மீள வலியுறுத்தினார்.

இந்த நோக்கத்தை அடைவதற்காக உணவுப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, தகவல்தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுற்றுலாப் பரிவர்த்தனைகள், அபிவிருத்தி ஒத்துழைப்பு, அதிகளவு முதலீடுகள் ஆகியன முன்னுரிமைக்குரிய விடயங் களாக இனங்காணப்பட்டுள்ளன என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய அரசு மற்றும் மக்களுடனான நீண்டகால உற வுகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நினைகூர்ந்துள்ளார்.

புதிய துறைகளில் ஒத்துழைப்பு காரணமாக இருநாடுகள் மத்தியிலான உறவுகள் மேலும் வலுவானதாக மாறும் எனப் பிரதமர் மஹிந்த நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

இலங்கை – இந்தியாவுக்கு இடையில் பகிரப்பட்ட பௌத்த பாரம்பரியமும், இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புக ளும், இரு நாடுகளுக்கும் இடையிலான அதிகரித்த ஒத்துழைப்புகளும் இரு நாடு களின் மக்களையும் நெருக்கமாக்குவ தற்குமான தளமாக விளங்கும் எனப் பிரதமர் மஹிந்த தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒத்துழைப்பை உரு வாக்குவதற்கு இந்தியத் தூதரகத்துடன் இணைந்து செயற்படுமாறு உரிய அதி காரிகளுக்கு அறிவுறுத்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமா னின் மறைவு குறித்த இந்திய அரசின் ஆழ்ந்த அனுதாபங்களையும் இந்தியத் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது வெளி யிட்டுள்ளார்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 1,469 பேரில் தற்போது 727 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

732 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பூரண குணமடைந் துள்ளனர். அத்துடன் 10 பேர் உயிரிழந் துள்ளனர்.

இதேவேளை, மேலும் 75 பேர் வைத்தி யசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## ஜூன் 2 தொடக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தை கூட்டும் அதிகாரம் சபாநாயகர் வசமாகின்றது.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார்.

இந்த அரசியல் நெருக்கடியைத் தவிர்க்க உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு முக்கியமாகின்றது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

17ஆவது அரசமைப்பில் சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப் பட்டாலும் 19ஆவது அரசமைப்பின் ஊடாகவே அது வலுப்பெற்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க தனது கொள் ளுப்பிட்டி இல்லத்தில் நேற்று கட்சி உறுப் பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:–

உலக பொருளாதார சுட்டெண்ணுக் கமைவாக இலங்கை படுமோசமான தொரு நிலையிலேயே உள்ளது. எனவே தான் நாட்டின் உண்மை நிலையைத் தெரியப்படுத்துமாறு அரசிடம் கோரி னேன்.

பாரியதொரு கடன் பொறிக்குள் சிக்கி விட்டுள்ளோம். சுற்றுலாத்துறை மற்றும் ஆடை உற்பத்தி என்பவற்றின் மீது மாத் திரம் நம்பிக்கை வைத்து செயற்பட முடி யாது. உரிய திட்டமொன்று அவசியம்.

அந்நியச் செலாவணியை அதிகரிக்க புதிய வாய்ப்புகள் தேடப்பட வேண்டும். இதனை மையப்படுத்திய வெளிவிவகா ரக் கொள்கையொன்று அவசியமாக வுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தொடக் கம் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலேயே பொதுத்தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. நீதிமன்றத் தின் தீர்ப்பின் பிரகாரமே தேர்தல்கள் ஆணைக்குழு செயற்பட வேண்டியதுள் ளது. 70 நாள்கள் அவசியம் என்பதை யும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

எனவே, தேர்தல்கள் ஆணைக்குழு வின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக் கும் வகையிலேயே நாம் தற்போது செயற் பட வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு வைப் பாதுகாத்தால் மாத்திரமே நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். ஆணைக் குழுவை தற்போது விமர்சிப்பவர்கள் எதிர்க்கட்சிக்குச் சென்ற பின்னர் அதன் தேவையை உணர்வார்கள்.

எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்தி லும் தேர்தல்கள் ஆணைக்குழு மக்கள் குறித்து சிந்தித்தே செயற்பட வேண்டும். அதேபோன்று மக்களின் உரிமைக ளுக்காக நாம் எப்போதும் முன்னிற்க வேண்டும். அரசியல் கட்சி என்ற வகை யில் தற்போது நாம் தேர்தல்கள் ஆணைக் குழுவைப் பாதுகாக்க வேண்டும். ஆணைக்குழுவை இல்லாதொழிக்கும் வகையிலேயே தற்போது செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

ஏனெனில் 17 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக சுயாதீன தேர்தல் கள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டா லும் அதிகாரக் கட்டமைப்பொன்று காணப்படவில்லை. ஆனால் 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் வலுப் பெற்றது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளி யிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு காலாவதி யாகாது என்றே சட்டமா அதிபர் கூறுகின் றார். ஆனால், எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம் திகதியுடன் அரசமைப்பின் அடிப்படையில் ஜனாதிபதியின் நாடாளு மன்றக் கலைப்புக் குறித்த வர்த்தமானி காலாவதியாகிவிடும். ஏனெனில் ஜனாதி பதியின் வர்த்தமானி அறிவித்தல் மூன்று மாதகாலம் மாத்திரமே செல்லுபடியாகும். அன்றிலிருந்து நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் சபாநாயகருக் குச் செல்கின்றது. இந்த அரசியல் நெருக் கடியைத் தவிர்க்க உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு முக்கியமாகின்றது.

எனவே, நாடாளுமன்றத்தை மீண் டும் கூட்டும் அதிகாரம் சபாநயகருக்கு உள்ளது என்ற கட்டளையை நீதிமன்றம் ஊடாகப் பெற்றுக்கொள்ளவே நாம் எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

# 'அம்பன்' புயலால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி



## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் கைமேல் பலன்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்று 'அம்பன்'புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்தவாரம் யாழ். மாவட்டத்தில் வீசிய அம்பன் புயலால் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட வாழைச் செய்கை மற்றும் பப்பாசிச் செய்கை முற்றாக அழிவுற்றிருந்தன. இதனால் அவற்றைப் பயிரிட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார நஷ்டத்தை எதிர்கொண்டிருந்தனர்.

இதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்த விவசாயிகள் தமது பயிரழிவுக்கான நஷ்டஈட்டைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் விவசாயிகளின் பாதிப்புக்களை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதிப்புக்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வார் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தப் பயிரழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்திருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை குறித்த அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க அனுமதி அளித்துள்ளது என ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு தெரிவித்தது.

## அனுஷா சந்திரசேகரன் நேரில் அஞ்சலி

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், மறைந்த அமைச்சருமான அமரர் ஆறுமுகம் தொண்டமானின் பூதவுடலுக்கு மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவி சாந்தினிதேவி சந்திரசேகரன் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் பிரதி செயலாளர் நாயக மும் சட்டத்தரணியுமான அனுஷா சந்திர சேகரன் நேற்று அஞ்சலி செலுத்தினர்.



## ருமேனியாவில் நிர்க்கதியாகித் தவித்த 36 இலங்கையர்களுக்கும் புதிய வேலை

மே 24 முதல் ருமேனியாவில் உள்ள புக்கரெஸ்ட் விமான நிலையத்தில் சிக்கித் தவித்த 36 இலங்கைத் தொழிலாளர்களுக்கும் புதிய வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என ருமேனிய தொழிலாளர் அமைச்சர் வயலெட்டா அலெக்ஸாண்ட்ரு தெரிவித்துள்ளார்.

இவர்களின் முன்னைய தொழிலிடத்தில் கொரோனா தொற்றுடன் பல தொழிலாளர்கள் பணிபுரிந்தனர் எனச் சந்தேகிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

வார்சாவில் உள்ள இலங்கை தூதரகம் கருத்து வெளியிடுகையில், ருமேனியாவில் உள்ள இலங்கையர்களுக்கு ருமேனிய தொழிலாளர் அமைப்பு மற்றும் பிற அமைப்புகளால் தங்குமிடம் மற்றும் பிற தேவைகளை வழங்குவதற்கு வசதிசெய்யப்பட வேண்டியமை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 36 இலங்கை தொழிலாளர்கள் அடங்கிய குழுவிற்கு வேறு இடத்தில் வேலை வாய்ப்பைப் பெற்று கொடுத்துள்ளதாக ருமேனிய அரசாங்கம் நேற்று இலங்கைத் தூதரகத்திற்குச் செய்தி அனுப்பியிருந்தது.

இந்த விடயத்தில் விரைந்து செயல்பட்ட ருமேனிய அரசாங்கத்தை இலங்கை வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன கௌரவித்தமையோடு இந்த வியத்தை இணக்கமாக தீர்ப்பதற்கும் ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொண்டார் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

## அச்சுவேலி மரம் அரியும் நிலையத்துக்கு தீ வைப்பு





யாழ், மே 28

அச்சுவேலி - பத்தமேனிப் பகுதியில் உள்ள மரம் அரியும் நிலையத்துக்கு இனந்தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மரம் அரிவு நிலைய உரிமையாளரினால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆட்சியாளர்களையே ஆட்டிப்படைக்கும் வல்லமை கொண்டவர் அமரர் ஆறுமுகம்

### அனுதாபச் செய்தியில் மு.கா. தலைவர் ஹக்கீம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவும், அமைச்சராகவும் இருந்த அமரர் ஆறுமுகம் தொண்டமான் தான் சார்ந்த மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சாத்வீகப் போராட்டத்தில் ஆட்சியாளர்களையே ஆட்டிப்படைக்கும் வல்லமை மிக்கவராக விளங்கினார். அவரின் மறைவு குறிப்பாக மலையகத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது, வடக்கு, கிழக்கிலும் நாடெங்கிலும் பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு மத்தியில் வாழும் அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் தானைத் தளபதியாகப் பலதசாப்த காலங்களாக கோலோச்சிய மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமானின் அடுத்த அரசியல் வாரிசாக அடையாளப்படுத்தப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்ட ஆறுமுகம் தொண்டமான் தலைமைத்துவ வெற்றிடத்தை நிரப்பியதோடு நில்லாது, பெரும்பாலும் தான் சார்ந்த மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சாத்வீகப் போராட்டத்தில் ஆட்சியாளர்களையே ஆட்டிப்படைக்கும் வல்லமை மிக்கவராக விளங்கினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தவராகக் காணப்பட்ட நண்பர் ஆறுமுகம் பொதுவாகவேஸ்தாபகத் தலைவர்களின் மறைவுக்குப் பின்னர் அரசியல் களத்தில் ஏற்படும் உடைவுகளுக்கும், நெருக்கடிகளுக்கும் துணிச்சலுடன் முகம் கொடுத்து தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மலையகத் தொழிலாளர் பரம்பரையின் சமூக அரசியல் செல்நெறியை முன்கொண்டு செல்வதில் அளப்பரிய பங்களிப்பைச் செய்தார்.

மலையக மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை உரியமுறையில் வென்றெடுப்பதற்காக அவர்களிலிருந்து தோற்றம் பெற்றுள்ள ஏனைய அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளையும் ஒரு போதும் குறைத்து மதிப்பிட முடியாது. ஆயினும், இறுதி மூச்சிவரை தனது மக்களின் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சியிலும், விமோசனத்திலும் மறைந்த ஆறுமுகம் தொண்டமான் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பதற்கு அவரது அரசியல் நகர்வுகளும், நடவடிக்கைகளும் சான்று பகர்கின்றன.

மலையக மக்களை மையப்படுத்தியே அவரது பேச்சும், மூச்சும் இருந்த போதிலும், அன்னாரின் செயற்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் பெரும்பான்மைச் சமூகத்தினரின் மத்தியில் வாழும் சிறுபான்மை மக்களின் விடிவை நோக்கியும் அமைந்திருந்தமை அவரது வாழ்வின் சிறப்பம்சமாகும்.

மறைந்த ஆறுமுகம் தொண்டமானின் குடும்பத்தினருக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினருக்கும், அவரை நேசித்த மண்ணின் மைந்தர்களுக்கும் தனித்தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெட்கமில்லாத கோரிக்கை இது!

கொரோனாத் தொற்றுப் பரவலை அடுத்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு நாடு முழுமையாக முடக்கப்பட்டது. சுமார் இரண்டு மாத காலம் நீடித்த கெடுபிடி கொஞ்சம், கொஞ்சமாகத் தளர்த்தப்படுகின்றது.

நாட்டின் பல பகுதிகளிலும் இரண்டு மாதங்களாக நீடித்த ஊரடங்கு பெருமளவில் தளர்த்தப்பட்டுள்ளது. இரவு 10 மணியளவில் இருந்து அதிகாலை 4 மணிவரைதான் இனி ஊரடங்கு.

இந்தத் தளர்வை ஒட்டி பொதுமக்களிடம் ஒத்துழைப்பைக் கோருகின்றனர் அதிகார வர்க்கத்தினர்.

நாட்டின் ஜனாதிபதியில் இருந்து அரசியல் தலைவர்கள் வரையிலும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தில் இருந்து பொலிஸ் அதிகாரிகள் வரையிலும், எல்லோருமே மக்களின் முழு அளவிலான ஒத்துழைப்பைக் கோரி வேண்டுகோள் விடுத்த வண்ணமுள்ளனர்.

அந்த வகையில் யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஸ் சேனாரட்னவும் யாழ்ப்பாண மக்களின் ஒத்துழைப்பைக் கோரியிருக்கின்றார்.

வழமைக்குத் திரும்பியுள்ள யாழ்ப்பாணம் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அவர் விவரித்திருக்கின்றார்.

சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாகப் பின்பற்றி, சமூக இடைவெளியைப் பேணி, பொதுமக்கள் கடமையாற்ற வேண்டும் என வலியுறுத்தும் அவர், ஏனைய மாவட்டங்களைப் போலவே எமது யாழ்ப்பாண மாவட்டத்திலும் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு பொலிஸாரினால் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது, எனவே மக்களும் பொலிஸாருக்கு உரிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

யாழ்.குடாநாட்டு மக்களின் நலனுக்கான கோரிக்கை இது. எமது மக்களுக்காகச் செய்யப்படுவது. ஆகவே அவர் கேட்காமலேயே – கோராமலேயே – நாம் நாமாகவே முடிவு கட்டி அந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அது நமது கடப்பாடு. பொறுப்பு. நம்மை நாமே பாதுகாத்து, அதன் மூலம் நமது சமூகத்தையும், நமது மாவட்டத்தையும், முழு இலங்கைத் தீவையும் பாதுகாப்பதற்கான எமது கட்டாயப் பங்களிப்பு இது. அதனை அவர் கோராமலேயே நாங்கள் நாங்களாகவே செய்தாக வேண்டும். அந்தப் பொறுப்பிலிருந்து நாங்கள் யாரும் தப்பமுடியாது.

அந்தப் பொறுப்புணர்வோடு, அந்தக் கடப்பாட்டை எங்களுக்கு உணர்த்தும் யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஸ் சேனாரட்னவிடம் அவரது நெஞ்சைத் தொட்டு ஒரு கேள்வியை குடாநாட்டு மக்களின் சார்பில் – ஏன் ஒட்டுமொத்தத் தமிழ் மக்கள் சார்பில் – பகிரங்க வினாவாக விடுக்க விரும்புகிறோம்.

கொரோனாத் தொற்றுத் தடுப்புத் தொடர்பான நடவடிக்கை விவகாரத்தில் இப்படி யாழ்.மாவட்ட மக்களிடம் ஒத்துழைப்புக் கோரும் யோக்கியத்தை – தகுதி – யாழ்.பொலிஸுக்கு உண்டா என்று நேரடியாகவே வினவ விரும்புகிறோம்.

பத்து நாள்களுக்கு முன்னர் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் ஆன்மாவையே தொட்டு அரற்றும் உணர்வுபூர்வமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வந்தபோது, சம்பந்தமே இல்லாத இதே கொரோனா தொடர்பான சட்ட விதிகளைத்தானே தமிழ் மக்கள் மீது அநாகரிகமான முறையில் ஆங்காங்கே நீங்கள் ஏவினீர்கள்?

முள்ளிவாய்க்கால் பிரசேத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிக்கு வேறுவிதமான கொரோனாக் கட்டுப்பாட்டுச் சட்டங்களும், உங்களுக்கு வேறுவிதமான சட்டங்களும் இருக்கவில்லை.

தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான அந்த அனுஷ்டானத்தைக் கொரோனாச் சட்ட விதிகளுக்கு அமைய அவர்கள் முன்னெடுப்பதற்கு முள்ளிவாய்க்காலுக்குப் பொறுப்பான அதிகாரி அனுமதித்திருந்த போது, உங்களுக்கு மட்டும் அந்த அனுஷ்டானம் வேறு விதமாகக் கண்ணில் பட்டமை ஏன்?

இப்போது கொழும்பிலும், பிற இடங்களிலும் – ஏன் அடுத்த நாள் கொழும்பில் வெற்றிவீரர் தினம் கொண்டாட்டங்களிலும் – மக்கள் நெருக்கமான நின்றமையை விடவா யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே அன்றைய நினைவேந்தல் நாள்களில் அவர்கள் சேர்ந்து, திரண்டு கூடியிருந்தார்கள்?

இதே கொரேனாப் பரவல் தடுப்பு விதிகளை உங்களை மேய்ப்பவர்களின் விருப்புக்கு ஏற்ற வகையில் – அவர்களின் ஏவலை நிறைவேற்றுவதற்காக – தார்மீக முறையற்ற, பண்பாடற்ற விதத்தில், பிரயோகித்து, நீதிமன்றங்களைத் தவறாக வழி நடத்திக் கடைசிநேர உத்தரவுகளைப் பெற்று, குடாநாட்டுத் தமிழர்களின் உணர்வெழுச்சி விடயத்துடன் கீழ்தரமாக – அநாகரிகமாக – விளையாடிவிட்டு, அதே சட்டத்தின் கீழ் மக்களின் ஒத்துழைப்பைக் கோர உங்களுக்கு வெட்கமாகவில்லையா?

எங்கள் நலனுக்காக இன்று குரல் எழுப்பி, ஒத்துழைப்புக் கோரும் உங்களிடம் இத்தகைய கேள்வியை நீங்கள் கேட்க வைத்திருப்பது மனவருத்தத்துக்கு உரியதுதான்.

எங்களுக்கு வெட்கம்,ரோஷம் உண்டல்லவா? அதனால் நாங்கள் கேட்டுத்தானேயாக வேண்டும்!

# தொண்டமானின் கடைசிப் படம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன்தான்



கொழும்பு, மே 28

நேற்று முன்தினம் முன்னிரவில் காலமான அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தாம் மரணமாவதற்கு ஓரிரு மணித்தியாலங்களுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அவரது விஜேராம மாவத்தை இல்லத்தில் சந்தித்தார்.

பிரதமருடன் அவர் பேசிக் கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்தான் அவரது கடைசிப்படம். அது எடுக்கப்பட்டபோது நேரம் மாலை 4.58 மணி. அது எடுக்கப்பட்டு ஓரிரு மணித்தியாலங்களில் ஆறுமுகம் தொண்டமான் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.

# நாடு திரும்புவோர் சிகிச்சை பெற மேலும் இரு வைத்தியசாலைகள்!

கொழும்பு, மே 28

இனிவரும் காலங்களில் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பும் இலங்கை பணியாளர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பின் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலும் இரண்டு வைத்தியசாலைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தெல்தெனிய வைத்தியசாலை மற்றும் அம்பாந்தோட்டை பழைய வைத்தியசாலை என்பனவே கொரோனா தொற்றாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற் காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

அத்துடன் தற்போது, குவைத்திலிருந்து வருகை தந்த அனைவரினதும் பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## நுவரெலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் இந்த முடிவைத் தெரிவித்தது.

தேர்தலில் போட்டியிடும் ஒருவர் உயிரிழந்தால் அவரின் இடத்துக்கு மூன்று நாள்களுக்குள் ஒருவரை நியமிக்க வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னையின் கீழ் இ.தொ.கா. போட்டியிடுவதால் முறைப்படி பொதுஜன முன்னணியின் செயலாளர் இதனைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பார்.

ஜீவன் தொண்டமானை நுவரெலியாவில் களமிறக்கவுள்ள இ.தொ.கா., கட்சித் தலைவராக யாரை நியமிப்பது என்பது குறித்து பின்னர் ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய சந்திப்பு தொடர்பில் பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்குப் பதிலாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு ஜீவன் தொண்டமானை நியமிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் குழு கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்ததோடு, அரசியல் குழு உறுப்பினர்கள் கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுப் பிரதமரைச் சந்தித்தனர். இதன்போது, இந்தத் தீர்மானத்தை கட்சியின் உப தலைவர் செந்தில் தொண்டமான் பிரதமரிடம் முன்வைத்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸானது, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்காக வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளது. அதனடிப்படையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்துக்கு மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் வேட்புமனு தாக்கல் செய்திருந்த நிலையில், அவருக்குப் பதிலாக ஜீவன் தொண்டமானைக் களமிறக்க அனுமதிக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்தது.

ஆறுமுகம் தொண்டமானுக்கு பதிலாக அவரது மகன் ஜீவன் தொண்டமானை நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட வைக்கக் கட்சி எடுத்த இந்த முடிவை இதன்போது பிரதமர் பாராட்டினார். அத்தோடு, இந்தக் கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமருடனான இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல்குழு உறுப்பினர்களான டி.மதியோகராஜா, எம்.ராமேஸ்வரன், ஏ.பி.சக்திவேல், ஏ.பிலிப்குமார், கே.கனகராஜ், எல்.பாரதிதாசன், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

## கொரோனாவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது மக்கள் பாதுகாப்பான முறையில் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிர்த்தரப்பினர் எவ்வித ஆதரவையும் வழங்கவில்லை.

நெருக்கடி நிலையிலும் எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபத்தைத் தேடிக்கொள்ளவே முயற்சித்தார்கள். வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் விடயத்தைத் தற்போது எதிர்த்தரப்பினர் விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளார்கள்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதில் அரசு பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றது. அனைவரும் பாதுகாப்பான முறையில் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்கள்.

எதிர்த்தரப்பினரது அரசியல் பிரசாரங்களுக்கு மக்கள் கவனம் செலுத்தக்கூடாது. தற்போதைய நெருக்கடி நிலையை எம்மால் வெற்றிகொள்ள முடியும் – என்றார்.

## வெடிவிபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் 7 வருடங்களுக்கு முன்னர் அமைந்திருந்த இராணுவ முகாமுக்கு அண்மையில் இரு சிறுவர்கள் இனம் தெரியாத பொருள் ஒன்றை எடுத்துச்சென்று சுத்தியல் ஒன்றினால் தாக்கியுள்ளனர். இதன்போது, அந்தப் பொருள் திடீர் என்று வெடித்துள்ளது.

இதனால் காயமடைந்த அவர்கள் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

நியாஸ் சனாஸ் (வயது – 12), முகமட் ராசித் (வயது – 16) ஆகிய சிறுவர்களே காயமடைந்துள்ளனர். விபத்து தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஏமன் இராணுவத் தளத்தின் மீது ஏவுகணை தாக்குதல்; 7 பேர் பலி

## தலைமைத் தளபதியின் மகன், மருமகன் சாவு



சானா,மே 28

ஏமன் இராணுவத் தளத்தின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதில் 7 பேர் பலியாகி உள்ளனர்.

ஏமனில் உள்ள ஹவுதி படைகள் செவ்வாய்க் கிழமை தலைநகர் சனாவின் வடகிழக்கில் மரிப் மாகாணத்தில் உள்ள சவுதி ஆதரவு அரசாங்கத்தின் இராணுவத் தளத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் தலைமைத் தளபதியின் உறவினர்கள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈரான் ஆதரவுப்பெற்ற ஹவுதி போராளிப்படையை எதிர்த்துப் போராடும் சவுதி தலைமையிலான கூட்டணி, கொரோனா வைரஸ் தொற்றுநோயால் ஏப்ரல் 24 ஆம் திகதி அன்று ஒரு மாத போர் நிறுத்த ஒப்பந்தத்தை அறிவித்தது. ஒரு மாதம் முடிவடைந்த நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், தற்போது ஹவுதி இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை.

நேற்று நடந்த தாக்குதலில் தலைமைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜாகீர் பின் அஜீஸ் உயிர் தப்பினார் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அவரது மகன்களில் ஒருவர் மற்றும் ஒரு மருமகன் என இரண்டு அதிகாரிகளும், மேலும் 5 பேரும் கொல்லப்பட்டனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அவரது மற்றொரு மகன் இதை டுவிட்டரில் உறுதிப்படுத்தினார்.

தெற்கில் உள்ள சவுதி ஆதரவு அரசாங்கத்திற்கும், வடக்கை தளமாகக் கொண்ட ஹவுதி இயக்கத்திற்கும் இடையே ஏமன் பிளவுபட்டுள்ளது. ஹவுதி குழு 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தலைநகரான சனாவில் அதிகாரத்திலிருந்து அரசாங்கத்தை வெளியேற்றியதிலிருந்து, சில மாதங்களுக்குப் பிறகு ஏமன் உள்நாட்டு விவகாரத்தில் சவுதி தலைமையிலான கூட்டணி தலையிட வழிவகுத்தது.

# ரஷ்யாவில் இராணுவ ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கியதில் நால்வர் சாவு



ரஷ்யாவில் மீண்டும் ஓர் இராணுவ ஹெலிக்கொப்டர் விபத்தில் நால்வர் சாவடைந்தனர்.

ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் உள்ள தன்னாட்சி பெற்ற சுகோட்கா பிராந்தியத்தில் இருந்து அந்த நாட்டு இராணுவத்துக்குச் சொந்தமான 'எம்.ஐ.8' ரக ஹெலிக்கொப்டர் வழக்கமான பயிற்சிக்காகப் புறப்பட்டுச் சென்றது.

ஹெலிக்கொப்டரில் 3 வீரர்களும், ஒரு தொழில்நுட்ப வல்லுனரும் இருந்தனர். இந்த ஹெலிக்கொப்டர் பயிற்சியை முடித்துக்கொண்டு சுகோட்கா பிராந்தியத்தின் அனாடிர் நகருக்கு திரும்பியது.

அனாடிர் விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது, ஹெலிக்கொப்டரில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதனால் தரையிறங்க முடியாமல் ஹெலிக்கொப்டர் வானில் வட்டமடித்தது.

பின்னர் விமானியின் கட்டுப்பாட்டை இழந்த ஹெலிக்கொப்டர் விமான நிலையத்தின் ஓடுபாதையில் விழுந்து நொறுங்கியது. இந்த கோர விபத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

ஒரு வாரத்துக்குள் ரஷ்ய ராணுவ ஹெலிக்கொப்டர் 'எம்.ஐ.8' விபத்துக்குள்ளாவது இது 2 ஆவது முறையாகும். கடந்த 19 ஆம் திகதி தலைநகர் மொஸ்கோ அருகே உள்ள கிலின் நகரில் 'எம்.ஐ.8' ரக ஹெலிக்கொப்டர் தரையிறங்கும்போது விபத்தில் சிக்கியதில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியானமை நினைவுகூரத்தக்கது.

# பிரதமரின் ஆலோசகர் ஊரடங்கை மீறிய விவகாரம் ஆட்சேபித்து இங்கிலாந்து அமைச்சர் ராஜினாமா!




டொமினிக் கம்மிங்ஸ் விவகாரத்தில் தனது எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக ஸ்கொட்லாந்து அமைச்சரான டக்ளஸ் ரோஸ் என்பவர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சனின் மூத்த உதவியாளரும், அவரது தலைமை உத்தி ஆலோசகராகவும் இருப்பவர் டொமினிக் கம்மிங்ஸ். இவர், கொரோனா பரவலை தடுக்க அங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறினார் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அவர் வீட்டை விட்டு வெளியேறி 250 மைல் தொலைவில் உள்ள தனது பெற்றோர் இல்லத்துக்குச் சென்று வந்துள்ளார் எனக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. ஊரடங்கு விதிகளை மீறிய அவரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு அவரது சொந்த கட்சியான கொன்சர்வேடிவ் கட்சி எம்.பி.க்களே அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆனால் பிரதமர் போரிஸ் ஜொன்சன் இந்த விவகாரத்தில் தொடர்ந்து மௌனம் காத்து வருகிறார்.

இந்த நிலையில் டொமினிக்கம்மிங்ஸ் விவகாரத்தில் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு தனது எதிர்ப்பை பதிவு செய்யும் விதமாக ஸ்கொட்லாந்து அமைச்சரான டக்ளஸ் ரோஸ் என்பவர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். டக்ளஸ் ரோசின் ராஜினாமா கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், எனினும் அவரது முடிவுக்காக வருத்தப் படுவதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஸ்கொட்லாந்து மந்திரியின் ராஜினாமா டொமினிக் கம்மிங்ஸ் விவகாரத்தில் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொரோனாப் பாதிப்பு குறைந்து வரும் நாடுகள் உடனே 2ஆம் அலையை எதிர்கொள்ளக்கூடும்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொரோனாத் தொற்றுக் குறைந்துள்ள நாடுகளில், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தளர்த்தினால், இரண்டாம் கட்ட தொற்று அலை வீசி அடிக்கும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெனீவாவில் செய்தியாளர்களிடம் ஒன்லைனில் பேசிய உலக சுகாதார நிறுவனத்தின் அவசரகால சேவைகள் துறை இயக்குநர் மைக்ரேயான், உலகம் இப்போது கொரோனா அலையின் முதல் கட்டத்தின் மத்தியில் இருப்பதாக கூறினார்.

பல நாடுகளில் தொற்றுக் குறைந்துள்ள நேரத்தில் அமெரிக்க நாடுகள், தெற்காசியா மற்றும் ஆப்பிரிக்காவில் அதன் தாக்கம் அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய தொற்று நோய்கள் எப்போதும் அலை அலையாகத்தான் வரும் என்ற மைக்ரேயான், முதற்கட்ட அலை ஓய்ந்த நாடுகள் இந்த ஆண்டு இறுதியில் இரண்டாம் கட்ட அலையைச் சந்திக்க நேரிடும் என்றார். உலக சுகாதார நிறுவனத்தின் எச்சரிக்கை, பலதளர்வுகளை அறிவித்துள்ள ஐரோப்பிய நாடுகளுக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது.

# அமெரிக்காவில் தொற்று பாதித்தோர் எண்ணிக்கை 16 லட்சமாக அதிகரிப்பு



அமெரிக்காவில் கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை 16 லட்சத்து 81 ஆயிரத்து 418 ஆக அதிகரித்துள்ளது என்று ஜான் ஹாப்கின்ஸ் பங்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

கொரோனா மரண எண்ணிக்கை ஒரு லட்சத்து ஐந்நூறாக ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்காவில் அதிகபட்ச தொற்று நியூயோர்க் மாநிலத்தில் ஏற்பட்டுள்ளது. இங்கு 3 லட்சத்து 63 ஆயிரத்து 836 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. இறப்பு எண்ணிக்கை 29 ஆயிரத்து 302 ஆக உயர்ந்துள்ளது.

நியூயோர்க்கைத் தொடர்ந்து இரண்டாம் இடத்தில் நியூஜெர்சியும், இல்லினாயிஸ், கலிபோர்னியா ஆகிய மாநிலங்கள் தலா 3 மற்றும் 4 ஆம் இடங்களிலும் உள்ளன.

# இந்தியா – சீனா எல்லைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா தயாராம்

வொஷிங்டன்,மே28

இந்தியா – சீனா எல்லைப் பிரச்சினையில் இரு நாடுகளுக்கிடையே மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அருணாசலப் பிரதேசத்தை முழுவதுமாக சொந்தம் கொண்டாடும் சீனா, லடாக்கின் சில பகுதிகளையும் சொந்தம் கொண்டாடி வருகிறது. அதனால்தான், லடாக்கை யூனியன் பிரதேசமாக இந்தியா அறிவித்தபோது, அதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்தது.

கிழக்கு லடாக்கின் பங்காங் சோ ஏரி அருகே பிங்கர் பகுதியில் இந்தியா முக்கியமான சாலை அமைத்து வருகிறது. கல்வான் பள்ளத்தாக்கில் இணைப்பு சாலை ஒன்றையும் அமைத்து வருகிறது.

இந்தச் சாலைகள் அமைப்பதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இது தொடர்பாக, கடந்த 5 ஆம் திகதி, கிழக்கு லடாக்கில் பங்காங் சோ ஏரி அருகே இந்திய – சீனப் படைகள் இடையே மோதல் நடந்தது.



இரும்பு கம்பிகள், தடிகள் ஆகியவற்றை கொண்டு மோதினர். கல்வீச்சிலும் ஈடுபட்டனர். இதில், இருதரப்பிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பின்னர், 9 ஆம் திகதி சிக்கிம் மாநிலத்திலும் மோதல் நடந்தது. இதையடுத்து, இரு நாடுகளும் தங்கள் படைபலத்தை அதிகரித்துள்ளன. அங்கு ரோந்து சுற்றி வருகின்றன. இதனால் எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது.

இந்தியா-சீனா இடையே 3 ஆயிரத்து 488 கிலோ மீற்றர் தூரத்துக்கு எல்லை கோடு உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாகத்தான் எல்லை பகுதிகளில் சாலை உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இந்தியா தீவிரமாக உள்ளது.

இதற்கிடையே லடாக் எல்லையில் சீனா தனது ராணுவப் படைகளைக் குவித்துள்ளது. இதற்குப் பதிலடி தரும் வகையில் இந்திய ராணுவமும் லடாக் எல்லையில் படைகளைக் குவித்துள்ளது. இதனால், எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில், எல்லைப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கிடையே மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா தயாராக உள்ளதாக டிரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இதுபற்றி இருநாடுகளிடம் தகவல் தெரிவித்திருப்பதாகவும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே, காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா, பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக டிரம்ப் தெரிவித்து வந்தார். ஆனால், காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது

## கொரோனா பாதித்த கர்ப்பிணிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன

ஐதராபாத் காந்தி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி பெண்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு கொரோனா தொற்று இருந்தாலும், மருத்துவர்கள் சிறப்பான சிகிச்சை அளித்து ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றெடுக்க உதவி புரிந்து வருகிறார்கள்.

கடந்த 8 ஆம் திகதி கொரோனோ வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட முதல் கர்ப்பிணி பெண் குழந்தை பெற்றெடுத்தாள். அதன்பின் ஏராளமான பெண்களுக்கு குழந்தை பிறந்துள்ளது.



இந்நிலையில் தெலுங்கானாவில் இருந்து வந்த பெண்ணுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரோக்கியமான இரட்டை பெண் குழந்தைகள் பிறந்துள்ளன. ஒரு குழந்தை 2.5 கிலோ எடையும், மற்றொரு குழந்தை 2 கிலோ எடை கொண்டிருந்தன என மருத்துவனை தெரிவித்துள்ளது.

மேலும், இரண்டு குழந்தைகளின் மாதிரிகள் கொரோனா பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது என மருத்துவ மனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

சில நாளகளுக்கு முன் மத்திய பிரதேசம் இந்தூரில் ஒரு பெண்ணுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. கடந்த மாதம் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் கொரோனா பாதித்த பெண்ணுக்கு குழந்தை பிறந்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டில் நேற்று மட்டும் 817 பேருக்கு கொரோனா

தமிழகத்தில் கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. நேற்று 817 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 18,545 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று 6 பேர் உயிரிழந்தமையால் மொத்த எண்ணிக்கை 133 ஆக உயர்ந்துள்ளது. நேற்று 11,231 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டது.

மொத்தமாக 4,23,018 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. நேற்று 567 பேர் குணமடைந்துள்ளனர். குணமடைந்தோர் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 909 ஆக உயர்ந்துள்ளது. இந்த தகவலை தமிழக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

## 30,000 அதிக திருமணங்கள் குஜராத்தில் மட்டும் ரத்தாகின

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இந்தியாவில் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதியில் இருந்து பொது முடக்கம் அமுலில் இருந்து வருகிறது. பொது முடக்கத்தின்போது மக்கள் மிகப்பெரிய அளவில் கூட்டம் கூடக்கூடாது என வலியுறுத்தப்பட்டது. மேலும் ஹோட்டல்கள், ரெஸ்டாரன்ட்கள், திருமண மண்டபங்கள் போன்றவை திறக்க அனுமதி மறுக்கப்பட்டது.

குஜராத்தில் மாநிலத்தில் வழமையாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் தான் அதிகமான திருமணங்கள் நடைபெறும். கடந்த இரு மாதங்களில் சுமார் 30 ஆயிரம் திருமணங்கள் இந்த கொரோனாவால் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று ஹோட்டல் மற்றும் ரெஸ்டாரன்ட் சங்கத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலானோர் மிகவும் நெருங்கிய உறவினர்கள் உள்பட 10 பேர் முன்னிலையில் எளிமையாக திருமணம் செய்து கொண்டனர் என்று திருமண ஏற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மே 18 ஆம் திகதியில் இருந்து பெரும்பாலான கட்டுப்பாடுகளுக்கு தளர்வு அளிக்கப்பட்டாலும் ஹோட்டல்கள், ரெஸ்டாரன்ட்கள், கோவில்கள் திறக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களால் திருமணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க கடினமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் திருமணத்தை அடுத்த சீசனான டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்திற்கு தள்ளிவைத்துள்ளனர்.

## ஜூன் முதலாம் திகதி முதல் மதத் தலங்களைத் திறக்க கர்நாடக முதல்வர் முயற்சி



பெங்களூரு,மே28

கர்நாடகாவில் ஜூன் முதலாம் திகதி முதல் வழிபாட்டு தலங்கள் திறக்க பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் எடியூரப்பா கடிதம் எழுதி உள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எடியூரப்பா எழுதியுள்ள கடிதத்தில், கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் ஆகிய வழிபாட்டுத் தலங்களை ஜூன் முதலாம் திகதி முதல் திறக்க அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு அனுமதி கிடைத்தால் வழிபாட்டுத் தலங்கள் ஜூன் முதலாம் திகதிக்குள் திறக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

நான்காம் கட்ட ஊரடங்கில் விதிகள் தளர்த்தப்பட்டதால் பஸ், ரயில், விமானப் போக்குவரத்து ஆகியன தொடங்கப்பட்டுள்ளன. அனைத்துக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வழிபாட்டுத் தலங்களைத் திறக்கவும் அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்துள்ளது. இது தொடர்பாக இன்று நடைபெறும் மாநில அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

## டிக்கெட்டுகளுக்காக ஆடுகளை விற்ற தொழிலாளிகள் விமான நிறுவன உதவியால் சொந்த ஊர் பறக்கின்றனர்

பொதுஊரடங்கு உத்தரவால் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் வெளி மாநிலங்களுக்குச் சென்றவர்கள் சொந்த மாநிலம் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது.

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த சில தொழிலாளர்கள் மகாராஷ்டிரா மாநிலத்தில் சிக்கியுள்ளனர். வேலை இல்லாததால் கையில் பணம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த 12 ஆம் திகதியில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேற்கு வங்காளத்தை சேர்ந்த மூன்று தொழிலாளர்கள் இந்த சிறப்பு ரெயில்கள் மூலம் சொந்த மாநிலம் திரும்ப முயன்றனர். ஆனால் ரயிலில் டிக்கெட் கிடைக்கவில்லை. அந்த நேரத்தில்தான் திங்கட்கிழமையில் இருந்து விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

மூன்று தொழிலாளர்கள் வீட்டில் வளர்த்த ஆடுகளை விற்று இண்டிகோ விமான நிறுவனம் கொல்கத்தாவுக்கு இயக்கும் விமானத்திற்கு டிக்கெட் பதிவு செய்தனர். டிக்கெட்டின் விலை சுமார் 30 ஆயிரத்து 600 ரூபாய் எனக் கூறப்படுகிறது.



விமான பயணத்திற்கு அவர்கள் தயாரான போது நேற்றுவரை மேற்கு வங்காளத்திற்கு விமான சேவை கிடையாது என அறிவிக்கப்பட்டது. இதனால் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. விமானங்கள் ரத்து செய்யப்பட்டால் பணம் திரும்பி வழங்கப்படாது என்று கூறப்படுகிறது.

இதனால் அந்த தொழிலாளர்கள் மிகுந்த மனவேதனை அடைந்தனர். பிறகு விமான நிறுவன அதிகாரிகளை நாடி உதவி கேட்டனர். அதிகாரிகள் தொழிலாளர்களின் நிலையை புரிந்து கொண்டு இன்று கொல்கத்தா செல்லும் விமானத்திற்கான டிக்கெட்டுக்களை வழங்கினார்.

அதிகாரிகளுக்கு நன்றி கூறி, டிக்கெட்டுக்களை பெற்ற தொழிலாளர்கள் இன்று சொந்த மாநிலம் செல்ல இருக்கிறார்கள்.

# மீண்டும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை பொலிவுறச் செய்த

# நகுலேஸ்வரக் குருக்கள்

போரில் நகுலேஸ்வரர் ஆலயம் மிகவும் பாதிக்கப்பட்ட போது மிக வயதிலே கூடிய, தள்ளாடுகின்ற வயதில் தனது உடல்நலத்தையும் பார்க்காமல் அல்லும் பகலும் பாடுபட்டு இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்று புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற நகுலேஸ்வரப் பெருமானின் பக்தர்களைப் பயன்படுத்தி, அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கீலமுற்றுப் போயிருக்கும் கோயில் சூழ் நிலையை எடுத்துரைத்து மீண்டும் உன்னதமானதொரு பொலிவுடன் கோயிலைச் சிறக்கச் செய்தவர் நகுலேஸ்வரக் குருக்கள் ஐயா என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஈழத் திருநாட்டின் பஞ்ச ஈஸ்வர தலங்களில் ஒன்றாகவும், வரலாற்றுப் பிரசித்திபெற்றதுமான கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் ஆதீன கர்த்தாவாகவும், பரம்பரைக் குருக்களாகவும் விளங்குகின்ற முதுபெரும் குருக்கள் ராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களின் 95 ஆவது அகவையை முன்னிட்டு நேற்றைய தினம்(27) கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சைவ உலகம் பெரும் மதிப்புக் கொடுக்கின்ற பெருந்தகை, பழுத்த பழமாக எங்கள் மத்தியில் நடமாடுகின்ற மூத்த சிவாச்சாரியார் ராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கும், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கும், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும் பல நூறு வருடப் பாரம்பரியத் தொடர்புண்டு. இந்த மூன்று ஆலயங்களிலும் குருக்கள் ஐயா நீண்டகாலம் வாழ வேண்டுமென நேற்றைய தினம் விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகள் இடம்பெற்றன.

அதுமாத்திரமன்றி 108 அடி உயரமான பெரும் கோபுரத்தை மிகவும் கஷ்டப்பட்டுப் பல அன்பர்களிடம் நாடித் தேடிக் கும்பாபிகேத்தை நடத்தி முடித்த சிறப்புக்குரியவர்.

காளை மாடொன்றை ஏலமொன்றில் விற்று இறைச்சியாக்க முற்பட்ட போது அந்த மாட்டை இறைச்சியாக்கக் கூடாதென சைவமக்கள் எதிர்த்த போது யாழ். வர்த்தக சங்கம் மற்றும் சைவ அன்பர்கள் எடுத்த முயற்சியினால் குறித்த காளை மாடு கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் ஐயாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைப் பிள்ளை போன்று பராமரித்த நிலையில் சமீபத்தில் அந்த மாடு இறையடி சேர்ந்தது. நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்கின்ற ஆயிரக்கணக்கான அடியவர்கள் நகுலேஸ்வரப் பெருமானுடன் மேற்படி காளை மாட்டையும் தரிசிக்கின்ற வாய்ப்பை நகுலேஸ்வரக் குருக்கள் ஏற்படுத்திக் கொடுத்தவர்.

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்திலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்றவர். சிறந்த ஆங்கில அறிவும், சமஸ்கிருத அறிவும் நிறைந்த குருக்கள். எந்த சபையிலும், எவரிடத்திலும் பேசுகின்ற ஆற்றல் மிக்கவர். அதனால், இந்த நாட்டில் ஜனாதிபதியாக வந்தவர்கள், பிரதமராக



## நேற்று அவரது 95 ஆவது அகவையை முன்னிட்டு செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் வாழ்த்து

வந்தவர்கள் உள்ளிட்ட அனைவருடனும் இந்த ஆலயம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை, குறிப்பாகப் போரிலே இவ்வாலயம் எத்தகைய பாதிப்புக்களைச் சந்தித்துள்ளது என்பதை எடுத்துரைத்து வந்தவர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலே விசேட பூசை வழிபாடுகளில் பங்கிப் பற்றியிருந்தார்கள் . அவர்களுக்காக விசேட அபி ஷேக ஆராதனைகளை நடத்தி இந்தியாவுக்கும், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கும் இடையில் நீண்ட பாரம்பரியத் தொடர்புகளையும் இந்தியப் பிரதமருக்கு எடுத்துரைத்தார்கள்.

நகுலேஸ்வரக் குருக்களின் 95 ஆவது பிறந்த நாளைப் பெருவிழாவாக கொண்டாட வேண்டுமெனக் கருதிய போதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக அவரது 95 ஆவது அகவையை அபிஷேகம், பூசைகளுடன் மாத்திரம் எளிமையான முறையில் நடாத்துவதற்கு அவரது அன்புக்குப் பாத்திரமானவர்கள் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்

எனவே, தற்போது எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் முதுபெரும் சிவாச்சாரியார், வேத விற்பன்னர், உன்னதமான நகுலேஸ்வரர் ஆலயத்தினுடைய ஆதீன கர்த்தா நகுலேஸ்வரக் குருக்களின் 95 ஆவது அகவை நாளில் நாங்களனைவரும் அவரை வணங்கி, வாழ்த்துவோம்.

ஐயா பல்லாண்டு வாழ வேண்டுமென நகுலாம்பாள் சமேத நகுலேஸ்வரப் பெருமானையும், மாவைக் கந்தனையும், துர்க்கா அம்பாளையும் பிரார்த்தித்து

எனது வாழ்த்துக்களையும் சமர்ப்பித்துக் கொள்கின்றேன் – எனவும் அவர் தனது வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

செய்தித் தொகுப்பு : –
செ. ரவிசாந்த்



# இந்தியப் பெருங்கடல்,16 நாடுகள், 12 ஆயிரம் கி.மீற்றர் தூரம் வியக்க வைக்கும் ஒரு பறவையின் நெடுந்தொலைவுப் பயணம்!



வியக்கத்தக்க ஏழாயிரத்து ஐந்நூறு மைல் பயணத்தை நிறைவு செய்கிறது குயில் இனப் பறவை ஒன்று.

குயில் இனத்தைச் சேர்ந்த பறவை ஒன்று தென் ஆப்ரிக்காவில் இருந்து மங்கோலியாவிற்கு சுமார் 12 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கும் அதிகமாக பயணித்ததை செயற்கைக்கோள் மூலம் கண்டறிந்துள்ளனர் விஞ்ஞானிகள்.

குளிர்காலங்களில் சாம்பியாவில் வாழும் இந்த பறவை 16 நாடுகளை தாண்டிப் பறந்துள்ளது. வழியில் பெருங்கடல், அதிக காற்று என அனைத்தையும் எதிர்கொண்டுள்ளது.

இது ஒரு வியக்கத்தக்கப் பயணம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மங்கோலிய விஞ்ஞானிகள் மற்றும் பிரிட்டனின் பறவையியல் அறக்கட்டளை இணைந்து பறவைகளின் நெடுந்தூர இடம்பெயர்வுகள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் ஒரு பகுதியாக ஐந்து குயில் இனப் பறவைகளை செயற்கைக்கோள் மூலம் கண்காணித்தனர் அதில் ஓனன் என்று அழைக்கப்படும் பறவை மட்டுமே தனது நெடுந்தூர பயணத்தை நிறைவு செய்துள்ளது.

இந்த ஓனன் பறவை ஓய்வேதும் எடுக்காமல் இந்தியப் பெருங்கடலை மணிக்கு 60 கிமீட்டர் வேகத்தில் கடந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் கென்யா, சௌதி அரேபியா மற்றும் வங்கதேசம் என உலகின் ஒவ்வொரு பகுதியில் இருக்கும் நாடுகளையும் தனது பயணத்தில் கடந்துள்ளது.

# தொண்டமானுக்கு இரங்கல்

## ஆறுமுகன் தொண்டமானின் இழப்பு மலையக சமூகத்துக்கு பெரும் பேரிழப்பு

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் கவலை



கொழும்பு,மே28

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவு, மலையக வாழ்வாதாரச் சிந்தனைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிசாத் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.

அன்னாரின் திடீர் மறைவு குறித்து அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அமரர் ஆறுமுகம் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முறையான திட்டங்கள் தீட்டியவர். 1994 ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அவர், தனது பாட்டனார் சௌமிய மூர்த்தி தொண்டமானால் மிகச் சிறப்பாகப் புடம் போடப்பட்டிருந்தார். 1999 ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை பதவியை ஏற்றதிலிருந்து, சுமார் இருபது வருடங்கள் மலையக சமூகத்தில் அவர் ஏற்படுத்திய மாற்றங்கள், அமரர் ஆறுமுகம் தொண்டமானின் ஆளுமைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

சிறுபான்மை சமூகமொன்றின் தலைவரான அவர், ஏனைய சிறுபான்மைச் சமூகங்களுக்காகவும் குரல் கொடுத்தவர். கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்திலே சமூகத் தலைவனுக்குரிய ஆளுமைகளை வெளிப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. ஆயிரம்ரூபாசம்பளத்தை வென்றெடுக்கும் அவரது பிரயத்தனங்கள், அன்னாரின் இறுதி மூச்சு அடங்கும் வரை இருந்தமை, நேற்று மாலை முக்கியஸ்தர்களுடன் இடம் பெற்ற சந்திப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அன்னாரது இழப்பால் துயருறும் அனைவரது துயரிலும் நானும் பங்கு கொள்கிறேன்.-என்றுஅகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

## உணர்ச்சிப் பேச்சு அரசியலுக்கு உட்படாமல்

## அரசுடன் பேசுதல், போராடுதல், பெறுதல் என்ற யதார்த்த வழி நின்றவர் ஆறுமுகன் தொண்டமான்

### அஞ்சலிச் செய்தியில் டக்ளஸ் தேவானந்தா



மலையகதமிழ் மக்களும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களும் இரு வேறு இனங்களல்லர். தமக்கே உரித்தான தனித்துவமான பண்பாடுகளை அவர்கள் கொண்டிருந்தாலும் நாமும் அவர்களும் பேசும் மொழியாலும், இனம் என்ற உணர்வாலும் ஒன்றானவர்கள். மலையக மக்களின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானை நாம் நெஞ்சில் நினைவேந்தி அஞ்சலி மரியாதை செலுத்துகின்றோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்-

மலையக மக்களை நாமும் எமது ஆழ்மனங்களின் அன்புடன் நேசித்தவர்கள் என்பதை, எமது ஆரம்பகால நீதியான உரிமைப்போராட்டத்திலும் திம்பு பேச்சு மேசையிலும் நிரூபித்து காட்டியவர்கள் என்பதையும் நினைவுபடுத்துகிறோம்.

அந்த மலையக மக்களின் தலைவரின் பேரிழப்பு எமக்கு பேரதிர்ச்சியைத் தந்திருக்கிறது, தனிப்பெரும் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமானின் இழப்பின் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தை தலைமையை ஏற்று நடத்திய தலைவனின் இழப்பு ஆழ்ந்த துயரங்களை எமக்குத் தந்திருக்கிறது.

வெறுமனே உணர்ச்சிப் பேச்சின் அரசியலுக்குள் தன்னை உட்படுத்தாமல் அரசுடன் பேசுதல், போராடுதல், பெறுதல் என்ற யதார்த்த அரசியல் வழி நின்று தன்னால் முடிந்தளவு உரிமைகளை மலையக மக்களுக்கு பெற்றுக்கொடுத்தவர் அவர். அதனால் மலையகத்தில் பன்முக அரசியலில் ஜனநாயக ரீதியில் தோன்றிய மாற்றுக் கட்சிகளாலும் நேசிக்கப்படுகின்ற ஒருவராக அவர் திகழ்கின்றார்.

மலையக மக்களின் மனங்களின் சிம்மாசனமிட்டு வீற்றிருந்த அவர் இன்று எம்மை விட்டு நீங்கி விட்டாலும் அவர் எண்ணியும் இன்னமும் நிறைவேறாத அவரது கனவுகளை அவரது இடத்தில் இனி இருப்பவர்கள் மட்டுமன்றி, சக மலையக மக்களின் கட்சிகளும் ஒன்று பட்டு நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மலையகத்தமிழ் மக்களின் வாழ்வில் வாசலில் விடியலின் ஒளி முழுமையாக தோன்றவில்லை. அதை சாத்தியமாக்குவதே தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதையாகும் அதற்காக நாமும் குரலெழுப்புவோம். அதை சாத்தியமாக்க நாமும் சேர்ந்துழைப்போம். தலைவனின் இழப்பால் கனத்த இதயத்துடிப்புடன் துயரில் ஆழ்ந்திருக்கும் மலையக தமிழ் மக்களின் துயரில் நாமும் பங்கெடுகின்றோம். ஒரு வரலாற்று அரசியல் தலைவராக, மாபெரும் தொழிற்சங்கமொன்றின் வழிகாட்டியாக,எமது அரசியல் நண்பராக, மறைந்து போன ஆறுமுகன் தொண்டமான் அவர்களுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சார்பாகவும் எமது கட்சியின் சார்பாகவும் அஞ்சலி மரியாதை. - எனத் தெரிவித்துள்ளார்.

## நம்பிக்கை மிக்க தலைவர் ஒருவரை அனைவரும் இழந்து நிற்கின்றோம்

### தமிழ்த் தேசியக் கட்சி அனுதாபம்

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவையொட்டி தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர. என். ஸ்ரீகாந்தா மற்றும் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சுதந்திர இலங்கைத் தீவில் சிங்களப் பேரினவாத அதிகார சக்திகளினால் குடியுரிமையும் வாக்குரிமையும் கொள்ளை அடிக்கப்பட்டு, நாடற்றவர்களாக நடுத்தெருவில் நின்ற எமது மலையக தமிழ் உறவுகளில் அரைப்பங்கினர் இந்திய மண்ணுக்கு



கப்பல் ஏற்றப்பட்டு விட, எஞ்சியிருந்தோர் மீண்டும் குடியுரிமையோடும் வாக்குரிமையோடும்எழுச்சியுறஆரம்பித்திருக்கும் இன்றைய சூழலில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், மறைந்த பெரும் தலைவர் சௌமியமூர்த்தி தொன்டமான் அவர்களின் அரசியல் வாரிசுமான ஆறுமுகம் தொன்டமான் அவர்கள் திடீரென மரணமடைந்தமை அதிர்ச்சியையும் ஆழ்ந்த சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



மலையக தமிழ் மக்களுக்காக துடிப்போடும் துணிவோடும் கடந்த கால்நூற்றாண்டுகாலமாகசெயற்பட்டு வந்த நம்பிக்கை மிக்க தலைவரை நாம் அனைவரும் இழந்திருக்கின்றோம்.

அவரின் இழப்பினால் ஏற்பட்டிருக்கும் அரசியல் வெற்றிடந்தை நிரப்புவது என்பது இலகுவானதோ அல்லது உடனடிச் சாந்தியமானதோ அல்ல. ஆயினும், அவர் தலைமை தாங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மூத்த தலைமுறையினரும், இளம் தலைவர்களும் ஒற்றுமையோடு செயலாற்றி, மறைந்த தலைவரின் திட்டங்களையும் பணிகளையும் தொடர்த்து முன்னெடுப்பதே அவருக்கு செலுத்தக் கூடிய உகந்த அஞ்சலியாக இருக்க முடியும்.

மறைந்த தலைவரின் குடும்பத்தினருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும், எமது தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பில், ஆழ்த்த அனுதாபங்களை சமர்ப்பித்து, அவர்களின் துயரில் நாம் அனைவரும் இணைந்து நிற்கின்றோம். - என்று உள்ளது.

## ஆறுமுகம் தொண்டமானின் மறைவு சிறுபான்மை மக்களுக்குப் பேரிழப்பு

### சந்திரகுமார் அஞ்சலிச் செய்தி

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவை ஒட்டி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

தொழிற்சங்கவாதியாக, அரசியல்வாதியாக மலையக மக்களின் நலன்களுக்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும், உரிமைகளுக்கும் தொடர்ச்சியாக செயற்பட்டு வந்த ஆறுமுகம் தொண்டமானின் மரணம் பேரதிர்ச்சி தந்துள்ளது. இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் வழியில் அரசியலை முன்னெடுத்தவர் ஆறுமுகம் தொண்டமான்.

மலையக அரசியலில் ஏற்பட்ட புதிய போக்குகளில் இ.தொ.கா. பலத்த சவால்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது. அந்தச் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நெருக்கடி ஆறுமுகம் தொண்டமானுக்கும் இருந்தது. அதேவேளை இலங்கை தேசிய அரசியலில் புதிய போக்கும் ஆறுமுகம் தொண்டமானின் அரசியலில் சவால்களை ஏற்படுத்தியது. ஒரே நேரத்தல் இரட்டைச் சவால்களுக்கு முகம் கொடுத்துத் தன்னுடைய அரசியலை முன்னெடுக்க வேண்டிய சூழலில் ஆறுமுகம் தொண்டமான் இருந்தார். இந்த நிலையில் மலையைய மக்களின் அரசியலையும் இ.தொ.கா. அரசியலையும் சமாந்தரமாக முன்னெடுப்பத்தில் அவர் கொண்டிருந்த அக்கறையை நாங்கள் கவனித்துவந்துள்ளோம். அவரும்நானும் சமகாலத்தில் நாடாளுமன்றத்தில் பிரதிநித்துவம் செய்திருகின்றோம். அந்த வகையில் ஆறுமுகம் தொண்டமான் மலையக மக்கள் மீது கொண்டுள்ள கரிசனையை நான் நன்கறிவேன். எனவே அவரின் இந்தத் திடீர் இழப்பு மலையக மக்களுக்கு பேரிழப்பு மட்டுமல்ல இலங்கை வாழ் சிறுபான்மை மக்களுக்கும் இழப்பே.

எனவே மறைந்த ஆறுமுகம் தொண்டமானுக்கு அஞ்சலியை செலுத்துவதோடு, அவரின் குடும்பத்தினருக்கும், கட்சியினருக்கும், ஆதரவாளர்களுக்கும் எமது ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றேன். - என்று உள்ளது.

## தென்மராட்சி விபத்தில் மூன்று பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 28

தென்மராட்சி –சாலை சந்திப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் – சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மீசாலை சந்தி ஊடாக சைக்கிளில் சிறுவன் ஒருவன் 9 வீதியைக் கடக்க முற்பட்டவேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் சைக்கிளில் சென்ற 11வயதான மீசாலை தெற்கைச் சேர்ந்த தே.சச்சுதன்,மோட்டார் சைக்கிளில் பயணித்த தவசிக்குளம், கொடிகாமத்தைச் சேர்ந்த 18 வயதான அ.அஜேந்திரன், மிருசுவில் தெற்கைச் சேர்ந்த 18வயதான லக்சன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.





## அரிசிக்கு உச்சபட்ச விலை நிர்ணயம்!

கொழும்பு, மே 28

அரிசி வகைகளுக்கான அதி கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாடு ஒரு கிலோ 96 ரூபாவாகவும், சம்பா 98 ரூபாவாகவும், கீரிச் சம்பா 125 ரூபாவாகவும் அதி கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

## வீட்டுகாணியில் கைக்குண்டுகள்!

முல்லைத்தீவு, மே 28

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறு தெற்குப் பகுதியில் காணி ஒன்றைத் துப்பரவு செய்யும் போது கைக்குண்டுகள் சில இனம் காணப்பட்டுள்ளதாகக் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மூங்கிலாறு தெற்குப் பகுதியில் விவசாயக் காணியில் போரின்போது கைவிடப்பட்ட நீண்ட மண் அரண் காணப்பட்ட நிலையில் அதனை அகற்றித் தருமாறு கோரிக்கை விடுத்தபோதும் இதுவரை அகற்றப்படாத நிலையில் காணியின் உரிமையாளர் கனரக இயந்திரம் கொண்டு அந்த மண் அரணை அகற்றியுள்ளார். இதன் போது மண்ணுக்குள் புதைக்கப்பட்ட சில கைக்குண்டுகள் இனம் காணப்பட்டுள்ளன.

இந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து காணியின் துப்பரவு பணிகள் கைவிடப்பட்டு சம்பவம் தொடர்பில் படையினருக்கும் பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.



அந்த கைக்குண்டுகள் இருக்கும் பகுதியை அடையாளப் படுத்திவிட்டு சென்றுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸார் இடத்தைப் பார்வையிட்டு அடையாளப்படுத்தி நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்து வெடிபொருட்களை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# விரும்பித் திறத்தல் முறையாமோ !

மீண்டும் தொடங்கும் மிடுக்குடனே
மீண்டும் திறந்தன மதுக்கடைகள்
தீண்டும் கொரனோ தன்நிலையை
ஊன்றத் தொடங்க நினைக்கிறதே
மாண்டு மடியும் மனிதவுயிர்
மனதைக் கலக்கி இருக்கையிலே
மீண்டும் மதுவை விற்கும்கடை
விரும்பித் திறத்தல் முறையாமோ!

திறந்த கடைகள் திசைகுலைக்கும்
உறங்கும் வெறியை உலுப்பிவிடும்
மறந்த கோரம் நின்றாடும்
மனித மாண்பு மழுங்கடியும்
குடும்பப் பெண்கள் நிலைகுலைவார்
குழந்தைகள் கண்ணீர் கடலமிழ்வார்
நலங்கள் எல்லாம் தானகலும்
நாட்டில் கடைகள் திறந்ததனால்!

நாட்டில் திறக்கப் பலவிருக்க
நலத்தை அழிக்கும் மதுக்கடைகள்
திறந்தால் சிறைகள் சிரித்துவிடும்
விருந்தாய் பலபேர் வருவரென
மருந்தே காணா இருக்கையிலே
மதுவைக் கையில் ஏந்துவதா
மதுவை விற்கும் கடையனைத்தும்
மக்கள் வாழ்வைக் குலைத்துவிடும்!

பாயில்படுக்க வைக்கும் மதுக்
கடைகள் திறந்தால் பலவழியும்
பாயும் கொரனோ இதைப்பார்த்து
பரிகாசமாகக் கேலி செய்யும்
தாயும் பிள்ளையும் சிரித்துநிற்கும்
சரித்திரம் இப்போ நடக்கிறது
மீண்டும் கடைகள் திறந்ததனால்
வீழ்வார் பலபேர் படுகுழியில்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - மெல்பேண், அவுஸ்திரேலியா

# மத்தள விமானநிலையத்தின் ஊடாக 160 இலங்கையர் தென்கொரியாவுக்கு



கொழும்பு, மே 28

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 160 இலங்கையர் தென்கொரியாவுக்கு திரும்பினர்.

இவர்கள் ஏற்கனவே தென் கொரியாவில் வேலை செய்பவர்கள் எனவும் அண்மை காலங்களில் ஓய்வு மற்றும் பல்வேறு காரணங்களுக் காக நாடுதிரும்பி இருந்தனர்.

கொரோனாவால் நாடு முடக்க நிலைக்கு சென்றதனால் தமது வேலைக்கு திரும்பமுடியாமல் தவித்திருந்த வர்களே செவ்வா யன்று தென்கொரியா திரும்பி னர்.

மியான்மர் ஏர்வேஸ் இன்டர் நேனல் நிறுவனத்திற்கு சொந்த மான விமானம் வருவிக்கப் பட்டு பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக தென்கொரி யாவின் இஞ்சி யோன் சர்வதேச விமான நிலயத்திக்கு அனுப்பிவைக் கப்பட்டனர்.

இந்த விமானசேவை மக் ஏவியேன் சர்வீசஸ் நிறுவ னத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நிறுவனத்தின் பணியாளர் டுசாந்த ரணசிங்க கலைக்கதிருக்குக் கருத்து தெரிவிக்கையில் -

தமது நிறுவனத்தால் பயணிகள் மற்றும் சரக்கு விமான சேவைகள் பல்வேறு தரப்பினரின் தேவைக் கேற்ப ஏற்பாடு செய்து கொடுக்கப்படுவதாகவும், இந்த கொரோனா காலத்திலும் தமது நிறுவனம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இந்த சேவையை மக்களுக்காக மேற்கொண்ட தாகவும் கூறினார்.








northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# ஜனாதிபதி மற்றும் அரசை கொழும்பு மேயர் பாராட்டு

கொரோனா வைரஸைக் கட்டுப் படுத்துவதற்கும் நாட்டை திறப்பதற் கும் எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து கொழும்பு மேயர் ரோஸி சேனாநா யக்க ஜனாதிபதியையும் அரசாங்கத் தையும் பாராட்டினார்.

வேலை சிறப்பாக செய்யப்படும் போது பாராட்டத் தயங்க மாட்டேன். கொரோனா வைரஸை எதிர்த்து உலகின் சக்திவாய்ந்த நாடுகள் போராடி வரும் ஒரு காலத்தில், இலங்கை வைரஸ் பரவுவதைக் கட் டுப்படுத்த சிறப்பாக செயல்பட்டது. இதனை நாம் பாராட்டியே ஆக வேண்டும் என்றார் ரோஸி சேன நாயக்க.



இதனாலே தற்போது கொழும்பு நகரத்தை வணிகத்திற்காகத் திறக் கவும், நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கவும் உதவியுள்ளது.

இவர் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தரும் கடந்த ஆட்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சாளரும் ஆவார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com


# தினம் ஒரு தலைப்பு

# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'ஆறுமுகநாவலர்' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.


படம் 1


படம் 2

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'வேட்டை'

**படம் 1**
**எஸ். ஹம்சாஜினி - தரம் 10**
**தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி**

**படம் 2**
**எட்ரியன் லுகி ஜோன் - தரம் 8**
**ஒகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை**

த. கபிலாஷ் – தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

கே. நிருஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் – தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

ம. ஜாலி – தரம் 4
தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

வி. ரவிந்திரன் – தரம் 7
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

ஆர். அஜின் – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். பிரீதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

திலகராஜ் திலக்சயன் – தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

எம். ஏ. ஷெரொனி – தரம் 8
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அருள்நாத் அக்சயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. அனன்யா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஹொபின்சன் ஷெர்வின் – தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

பெதுசன் – தரம் 10
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

கே. துஷாந்த் – தரம் 8
தி/ திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

என் வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை


காலைக்கதிர் Kalaikathir

வேட்டை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (28/05/2020) தலைப்பு
வேட்டை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# அமைச்சர் ஆறுமுகத்தின் இழப்பு தமிழ்ச் சமூகத்துக்குப் பேரிழப்பு!

## இரங்கல் செய்தியில் ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் இழப்பு தமிழ்ச் சமூகத்துக்குப் பேரிழப்பாகும். மக்கள்நேய அரசியல்வாதியான ஆறுமுகம் தொண்டமானின் மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நலிவுற்ற தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் சமூக வலுவூட்டல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானின் அகால மறைவு பற்றி அறிந்து நான் மிகவும் கவலையடைகிறேன்.

தனக்கு முன்னோடியாக இருந்த தனது பாட்டனாரும் சிரேஷ்ட தலைவருமான சௌமியமூர்த்தி தொண்டமானின் மகத்தான பணியை முன்னெடுத்துச் சென்ற ஆறுமுகம் தொண்டமான், மலையக தமிழ்ச் சமூகத்தின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்காகத் தைரியமாகச் செயற்பட்டார்.

தமிழ்ச் சமூகம் முகம்கொடுத்த பிரச்சினைகளைச் சரியாக அறிந்திருந்த தொண்டமான், அதற்காகத் தனது அரசியல் வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார். அக்காலகட்டத்தில் செயற்பட்டுவந்த சக்திவாய்ந்த பயங்கரவாத அமைப்பால் விடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு மத்தியிலும் தமிழர்களுக்கான தனி நாடு என்ற கருத்துக்கு ஆதரவளிக்க அவர் உறுதியாக மறுத்துவிட்டார்.

நலிவடைந்த தொழிலாளர்களாகக் கருதப்பட்ட பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான தனது பாட்டனாரின் முயற்சியை அவர் தொடர்ந்தும் முன்னெடுத்தார். சௌமியமூர்த்தி தொண்டமானால் ஆரம்பிக்கப்பட்டு, ஆறுமுகம் தொண்டமானால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் காரணமாக இன்று தோட்டச் சமூகத்தினர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்துள்ளனர்.

அரசியல் கட்சிகளுடன் செயற்படும்போது அவர் மூலோபாய இடைவினையாற்றுதல் பற்றிய ஒரு தீவிர அவதானியாகவும், மாணவராகவும் இருந்தார். அவரது முக்கிய அக்கறை தன்னை அவர்களது மறுக்கப்படமுடியாத தலைவராக ஏற்றிருந்த சமூகத்தின் உரிமைகளை வெல்வதாகும்.

ஆறுமுகம் தொண்டமானின் இழப்பு தமிழ்ச் சமூகத்துக்குப் பேரிழப்பாகும். மக்கள்நேய அரசியல்வாதியான ஆறுமுகம் தொண்டமானின் மறைவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் ஆத்மா அமைதியடையட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன் - என்றுள்ளது.

## அபுதாபியில் இலங்கை தூதரகம் இன்று மீளத் திறப்பு

தற்காலிகமாக மூடப்பட்ட ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் உள்ள இலங்கை தூதரகம் இன்று மீண்டும் திறக்கப்படும் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

தூதரக பணியாளர் ஐவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானமையை அடுத்து ஏற்பட்ட அவசரநிலை காரணமாக கடந்த மே 21 முதல் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

## மலையக மக்களுக்கு ஒரு வலுவான தலைவர் ஆறுமுகம் தொண்டமான் என விக்கி புகழாரம்

அமைச்சர் தொண்டமானின் மறைவை ஒட்டி தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

ஆறுமுகம் தொண்டமானின் மறைவு அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். புதிய இந்திய தூதுவரைச் சந்தித்து வந்து சில மணித்தியாலங்களில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

ஆறுமுகம் பல தடவைகள் என்னைக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சந்தித்துள்ளார். யாழ்ப்பாணம் வரும் போது முடியும் போதெல்லாம் வந்து சந்திப்பார். அவர் என்னை அரசியல்வாதி என்ற ரீதியில் சந்திப்பதை விட தனது பாட்டனாரின் நண்பர் என்ற முறையிலேயே வந்து பலமுறை சந்தித்ததுண்டு.

சௌமியமூர்த்தி தொண்டமான் கொழும்பில் என் வீட்டுக்கு அருகாமையில் றோயல் கல்லூரிக்கு முன் புறத் தில்தான் அந்தக் காலங்களில் குடியிருந்தார். அவரை ஒருமுறை நானும் வேறு சிலரும் சந்தித்த போது தனக் குப் பின் யார் என்று அவர் அங்கலாய்த்தமையை நாம் கண்டோம். மகன் இராமநாதன் நல்லவர் என்றும், ஆனால் அவரால் தனது பதவியின் சுமையைத் தூக்க முடியுமா, தாங்க முடியுமா என்று உரக்கக் கேட்டார்.

அப்போதுதான் அவரின் பேரன் ஆறுமுகத்தை உள்கொண்டுவருவது பற்றிப் பேசப்பட்டது. ஆறுமுகமே தகுந்த வாரிசு எனவும் அவர் வயதில் குறைந்தவராக இருந்தாலும் காலா காலத்தில் பொறுப்புடன் நடந்து கொள்வார் என்றும் அங்குள்ளவர்களால் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. சில காலங்களில் ஆறுமுகம் தனது பணியை ஏற்றார்.

காலக்கிரமத்தில் அவர் தம் பணியை உணர்ந்து மலையக மக்களுக்கு ஒரு வலுவான தலைவராகத் திகழ்ந்தார். பாட்டனாரின் வழியில் அவர் அவர்களை திறம்பட வழி நடத்தி வந்து சடுதியாக எம்மைவிட்டுப் பிரிந்தமை மலையக மக்களுக்கும் எமக்கும் மிகுந்த துயரையும் துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மலையக மக்களின் தலைமைத்துவத்தில் ஒரு பாரிய இடைவெளி தெரிகின்றது. தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு சவாலான கால கட்டமான இத்தருணத்தில் ஆறுமுகம் தொண்ட மானின் மறைவு ஒரு பேரதிர்ச்சியாக உணரப்படுகிறது. அவரின் வெற்றிடம் விரைவில் தக்கவரால் நிரப்பப் பட வேண்டும்.

ஒருவர் சடுதியாக வானுலகு ஏகுவது புண்ணியம் என்று கூறுவார்கள். அந்த விதத்தில் ஆறுமுகம் தொண்டமான் நீண்டகால சுகயீனத்தையோ துன்பத்தையோ எதிர் நோக்காமல் சென்றமை ஒரு புண்ணியம் என்றே கொள்ள வேண்டும்.

ஆறுமுகம் குடும்பத்தினருக்கு எனது உளமார்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முக்கியமாக தம்பி செந்தில் தொண்டமானுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆறு முகம் தொண்டமானின் ஆத்மா இறையடி சேர்வதாக! - என்று உள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2020 இல் வெளியிடப்பெற்றது.